From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No.76/16

Deposition of witness for: PW - 2

| | | | |
|---|---|---|---|
| Name | : Deivajothi | Father/Husband Name:Prammanandham | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | :13.02.2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2018.

**(எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர் இல்லை. சாட்சி சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது.)**

**முதல் விசாரணை: (அரசுதரப்பில்)**

நான் தற்போது தூத்துக்குடியில் குடியிருந்துவருகிறேன். வீட்டு குடித்தனம் செய்து வருகிறேன். அ.சா1 எனது கணவர், அவர் டிவிடி பிரைவேட் சிப்பிங் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் உரிமையாளராக இருந்து சிப்பிங் சர்வீஸ் தொழில் செய்து வருகிறார். இவ்வழக்கில் வாகன விபத்தில் இறந்துபோன தனவதி என்பவர் எனது மனைவியின் உடன் பிறந்த சகோதரி ஆவார். இறந்துபோன மாரிமுத்து தனவதியின் கணவர் ஆவார். விபத்தில் இறந்துபோன பிரியஷா, பிரதீப், என்னுடைய பேரன் பேத்திகள் ஆவார், விஜயகுமார் ஓட்டுனர் ஆவார். சுமார் 10 வருடத்திற்கு முன்பு 2 கார்களில் நானும், எனது கணவரும் ஒரு சான்டபி காரிலும், மற்றொரு காரில் வழக்கில் இறந்துபோனவர்கள் பயணம் செய்து சென்னக்கு சென்று கொண்டிருந்தோம். மேலூருக்கும் மதுரைக்கும் இடையில் உள்ள ஏடுபி ஹோட்டலில் நானும் எனது கணவரும் காரை நிறுத்தி உணவு சாப்பிட ஹோட்டலுக்கு சென்றோம். அப்போது காலை சுமார் 9 மணி இருக்கும்.

எங்கள் காருக்கு பின்னால் வந்த மற்றொரு காரில் வந்தவர்கள் வாகன விபத்தில் சிக்கிவிட்டார்கள். நானும் எனது கணவரும் விபத்துநடந்த இடத்திற்கு

சென்று பார்க்க போனோம். சம்பவ இடத்தை பார்த்தபோது ஒத்தக்கடைக்கு பிரியும் சாலையில் கார்மீது தனியார் பேருந்து மேலே ஏறி விபத்து ஏற்படுத்தியிருந்தது. அங்கு இருந்தவர்களிடம் விசாரித்தபோது ஒத்தக்கடைக்கு பிரியும் சாலையில் இடமிருந்தும் வேகமாக வந்த பேருந்தானது கார் மீது மோதி, மேலே ஏறி விபத்து ஏற்படுத்திவிட்டதாக சொன்னர்கள். விபத்து நடந்து நீண்ட காலம் ஆகிவிட்டதால் ஆஜர் எதிரி எனக்கு ஞாபகம் இல்லை. விபத்தில் படுகாயமடைந்த பிரியஷா, பிரதீப் ஆகிய இருவர்கள் உயிரும் ஆபத்தான நிலையில் இருந்ததால் அவர்களை மதுரை அப்போலோவிற்கு கொண்டு சென்றுவிட்டார்கள், மற்றவர்கள் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதால் அவர்களை மதுரை அரசு மருத்துவனைக்கு கொண்டு சென்றுவிட்டார்கள். ஆம்புலன்ஸ் வந்திருந்தது. என்னுடைய கணவரான அ.சா1 புகார் கொடுத்திருந்தார். போலீசார் என்னை விசாரனை செய்தார்கள்.

**குறுக்குவிசாரணை(எதிரிதரப்பில்).**

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர் இல்லை. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர் இல்லை. குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.